அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :122/2017
தேதி : 24/10/2017

## கல்வி குறித்த கருத்தரங்கம்

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் மாநில நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் அனைவரும் விவசாயம், கல்வி, சுகாதாரம், தொழில், கலை, கலாச்சாரம், மொழி உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் அறிவாற்றல் மிக்கவர்களாக, அவை குறித்த விவரங்கள் அறிந்தவர்களாக திகழ வேண்டும் என்ற எண்ணத்தை வலியுறுத்தி சமத்துவ மக்கள் கட்சி தலைவர் திரு சரத்குமார் அவர்கள் மேற்சொன்ன அனைத்து துறை சார்ந்த தலைப்புகளில் கருத்தரங்கம் நடத்துவதென தீர்மானித்து அறிவித்திருக்கிறார்.

அதையொட்டி கல்வி துறை குறித்து அனைவரும் தாங்கள் அறிந்து, அறிந்தவற்றைப் பகிரும் விதமாக நாளை 25.10.2017 புதன்கிழமை காலை 9.00 மணி முதல் கட்சியின் தலைமை அலுவலகத்தில் **"தமிழகத்தின் கல்வி தரத்தின் நிலைப்பாடு - அரசாங்கங்கள் செய்ய வேண்டியவை யாவை"** என்ற தலைப்பில் மாநில நிர்வாகிகள் கருத்துரை ஆற்றும் கருத்தரங்கம் நடைபெற உள்ளது.

இதையொட்டி மாவட்ட செயலாளர்கள் பங்கேற்கும் கருத்தரங்கம் கூடிய விரைவில் நடத்தப்பட உள்ளது. தொடர்ந்து இதுபோன்ற கருத்தரங்குகள் மாதத்திற்கு இரண்டு முறை நடைபெற உள்ளது. அடுத்த கருத்தரங்கத்திற்கான தலைப்பும் நடைபெறும் நாளும் விரைவில் அறிவிக்கப்படும் நாளை நடைபெறும் கல்வித்துறை குறித்த கருத்தரங்கில் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் திரு.ஆர்.சரத்குமார் அவர்கள் கல்வித் துறை குறித்த சிறப்பு ஆலோசனைகளை வழங்குவார்.

அன்புடன்

ஏ.என்.சுந்தரேசன்
மாநில பொருளாளர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com